# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 342/2023**

**Deposition of Witness for PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சுருளி** | Caste | : | |
| Father/Husband Name | : | **முத்துசாமி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 03.03.2026**

**முதல் விசாரணை** :

நான் அய்யன்கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி ராமன் என்ற தென்னரசு எனக்கு தம்பி முறையாவார். சுமார் ஒருவருடத்திற்கு முன்பு மேற்படி எனது தம்பி இறந்துவிட்டார். இந்த வழக்கில் நகை கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு எனது தம்பி சாட்சி ராமன் எதிரியிடம் நகை கொடுத்துள்ளதாகவும், ஆனால் அதை எதிரி அடகு வைத்து திருப்பாமல் முங்கிவிட்டதாகவும், இதுசம்பந்தமாக எதிரியிடம் சென்று கேட்கவேண்டும் என்றும் என்னை உடன் வருமாறு அழைத்தார். அதன்படி நானும் எனது தம்பியும் எதிரியிடம் சென்று கேட்டோம். அதற்கு எதிரி நகை முங்கிவிட்டதாக சொன்னார். பின்னர் நாங்கள் திரும்ப வந்துவிட்டோம். இதுசம்பந்தமாக எனது தம்பி காவல் நிலையத்தில் பகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

எனது தம்பி சாட்சி ராமன் விடுதலை சிறுத்தை கட்சியின் மாநில விவசாய அணி துணை செயலாளர் என்றால் சரிதான். மேற்படி எனது தம்பி சாட்சி ராமன் நகையை எதிரியிடம் கொடுத்ததாக சொல்லுவது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது நான் செல்லவில்லை என்றால் சரிதான். இறந்த ராமன் என்னிடம் நகை எதிரிக்கு கொடுத்தது சம்பந்தமாகவும் என்னை அவரிடம் அழைத்து சென்றதாகவும், சொல்வது உண்மைக்கு புறம்பானது ஆகும் என்றாலும் சாட்சி ராமன் எனது பெரியப்பா மகன் என்பதால் அவருக்கு எதிராக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 342/2023**

**Deposition of Witness for PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அன்னக்கொடி** | Caste | : | |
| Father/Husband Name | : | **தென்னரசு** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 03.03.2026**

**முதல் விசாரணை** :

நான் அய்யகோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி ராமன் எனது கணவர் ஆவார். சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு எனது கணவர் இறந்துவிட்டார். கடந்த 10 வருடத்திற்கு முன்பு எதிரியிடம் 3 பவுன் தங்க நகையை அடகு வைத்து பணம் கொடுக்குமாறு எனது கணவர் கொடுத்தார். பின்பு ஒரு வருடம் கழித்து நகையை முங்கிவிட்டது என்று எதிரி சொன்னார். இதுசம்பந்தமாக எனது கணவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனக்கு எழுதபடிக்க தெரியாது., எனது கணவர் விடுதலை சிறுத்தை கட்சியின் மாநில விவசாய அணி செயலாளராக இருந்தார் என்றால் சரிதான். உசிலம்பட்டி பகுதியில் நிறைய நபர்களுக்கு வங்கியில் பணம் வாங்கி தருவார் என்றும் காவல் நிலைய சம்பந்தப்பட்ட

விவாகாரங்களில் உடன் செல்வார் என்றால் சரிதான். எனது கணவர் சொல்லி தான் மேற்படி நகையை எதிரியிடம் கொடுத்தது பற்றி தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க எனது கணவருடன் நான் செல்லவில்லை என்றால் சரிதான். நகை முழ்கிபோய்விட்ட விபரம் எனது கணவர் சொல்லி தான் எனக்கு தெரியும். நகை அடகு வைத்து ரசீது எதுவும் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி ரசீது எதிரியிடம் உள்ளது. நான் சொல்வது போல் எதிரியிடம் நகை கொடுத்ததாகவும் அதை அடகு வைத்து முழ்கிவிட்டதாகவும் என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தொடுத்தவர் எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.